டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 278 - Madurai | Online Edition

# ஜல் ஜீவன் இயக்கம் 2.0 குறித்து மாவட்ட ஆட்சியர்களுடன் தேசிய அளவிலான ஆய்வுக் கூட்டம்

புது தில்லி, மே 23

மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின், குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை, ஜல் ஜீவன் இயக்கம் 2.0 இன் அமலாக்க கட்டமைப்பு மற்றும் கிராமப் புறங்களில் திடக்கழிவு மேலாண்மை விதிகளை திறம்பட அமல்படுத்துவது குறித்து விவாதிக்க நாடு முழுவதும் உள்ள மாவட்ட ஆட்சியர்கள், யூனியன் பிரதேசங்களில் துணை ஆணையர்களுடன் காணொலி மூலம் ஆய்வுக் கூட்டத்தை நடத்தியது.

இந்த ஆய்வில் நாடு முழுவதிலுமிருந்து சுமார் 759-க்கும் மேற்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய மறுஆய்வுக் கூட்டத்திற்கு குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை செயலாளர் அசோக் K.K. மீனா தலைமை தாங்கினார். கூடுதல் செயலாளர் மற்றும் திட்ட இயக்குநர் கமல் கிஷோர் சோன், தேசிய ஜல் ஜீவன் இயக்க இணை செயலாளர் ஐஸ்வர்யா சிங், இணை செயலாளர் உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தனது தொடக்க உரையில், அசோக் K.K. மீனா, ஜல் ஜீவன் மின் (ஜே.ஜே.எம்) மற்றும் தூய்மை இந்தியா கிராமிய இயக்கம் (எஸ்.பி.எம்-ஜி) ஆகிய இரண்டும் இப்போது நம்பகமான சேவை வழங்கல், செயல்பாடு, நிலைத்தன்மை மற்றும் சமூக உரிமையை நோக்கி உள்கட்டமைப்பு உருவாக்கத்தைத் தாண்டி கவனம் செலுத்த வேண்டிய கட்டத்தை எட்டியுள்ளன என்று கூறினார்.

# காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி

திருச்சி, மே 23

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற 26.05.2026 அன்று (செவ்வாய்க்கிழமை) காளான் வளர்ப்பு குறித்த நிலையப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் பல்வேறு வகையான காளான்களை கண்டு பிடித்தல், பால் காளான் மற்றும் சிப்பி காளான் வளர்க்கும் முறைகள், நிர்வாகம், வணிக காளான் வளர்ப்பு, செயல் விளக்கம், காளான் வளர்ப்பில் அனுபவம் வாய்ந்த தொழில் முனைவோர்களின் சொற்பொழிவு, சந்தை தகவல், காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு முறைகள், போன்றவை எடுத்துரைக்கப்படும்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் : 0431-2962854, 99443 98239, 88381 26730, 97156 26796 என்ற எண்களை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## உலர் மலர் தொழில்நுட்பம் குறித்த திறனூக்க பயிற்சி

கோயம்புத்தூர், மே 23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மலரியல் துறையில் வருகின்ற 26.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று 'உலர் மலர் தொழில்நுட்பம் குறித்த திறனூக்க பயிற்சி' ஒரு நாள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் பொதுமக்கள், அறிவியல் மாணவர்கள், புதிய தொழில் முனைவோர்கள் மற்றும் மகளிர் கலந்து கொண்டு பயன் பெறலாம். இந்த பயிற்சியின் முக்கிய நோக்கமாக, உலர் மலர் குறித்த தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியானது மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003ல் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும். விருப்பமுள்ளவர்கள் 25.05.2026 திங்கள் கிழமை, மாலை 5.00 மணிக்குள் முன்பதிவு செய்து கொள்ளவும்.

பயிற்சிக் கட்டணம் ரூ. 1180/- (Rs. 1000 + 18% GST) 1000/- (மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்படும்).

மேலும் விபரங்கள் மற்றும் தொடர்புக்கு, முனைவர் ம.விசாலாட்சி (98429 31296). முனைவர் சீ.ப.தாமரைச் செல்வி (98433 38666), மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

**அடுப்பில்லா பழ உணவுகளின் பட்டியல் மற்றும் செய்முறை விளக்கங்கள்**

அடுப்பில்லா சமையலில் பழங்களைப் பயன்படுத்தி பலவிதமான சுவையான மற்றும் ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கலாம்.

சில பிரபலமான உணவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

### 3. உலர் பழ லட்டு (Dry Fruit Laddu)

**தேவையான பொருட்கள்**

- பேரீச்சம்பழம் – 1 கப் (கொட்டை நீக்கியது)
- அத்திப்பழம் – 1/2 கப்
- முந்திரி – 1/4 கப்
- பாதாம் – 1/4 கப்
- பிஸ்தா – 1/4 கப்
- தேங்காய் துருவல் – 2 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)
- ஏலக்காய் தூள் – 1/4 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)

**செய்முறை விளக்கம்**

1. பேரீச்சம்பழம் மற்றும் அத்திப்பழத்தை மிக்ஸியில் போட்டு சற்று கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.
2. முந்திரி, பாதாம், பிஸ்தா ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
3. ஒரு பாத்திரத்தில் அரைத்த பழ கலவை, நறுக்கிய நட்ஸ், தேங்காய் துருவல் மற்றும் ஏலக்காய் தூள் சேர்த்து நன்கு கலக்கவும்.
4. இந்தக் கலவையை சிறு சிறு லட்டுகளாகப் பிடித்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# மீன் கழிவும் மகசூலும் வேளாண் மாணவர்களால் மீன் அமிலம் தயாரிப்பு



கடலூர், மே 23

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் AB Batch மாணவ மாணவிகள், ELAGR 401- Agriculture Waste Management மற்றும் ELAGR 402- Organic Production Technology (Experiential learning- அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரிப்பு தொடர்பான நடைமுறை பயிற்சியை கல்வி மற்றும் பயிற்சி நோக்குடன் முறையாக மேற்கொண்டனர்.

இந்த பயிற்சியில் மொத்தம் 45 மாணவர்கள் பங்கேற்று, வேளாண் கழிவுகளை பயனுள்ள உயிர் உரமாக மாற்றும் நடைமுறை அறிவை பெற்றனர். இப்பயிற்சி முனைவர் K.சுசீந்திரன், உதவி பேராசிரியர், முனைவர் R. கிருஷ்ணமூர்த்தி, உதவி பேராசிரியர் மற்றும் முனைவர் A.சுந்தரி, பேராசிரியர் மற்றும் உழவியல் துறைத் தலைவர் ஆகியோரின் வழி காட்டுதலின் கீழ் சிறப்பாக நடத்தப்பட்டது

**மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறை (Fish Amino Acid Preparation Procedure)**

**தேவையான பொருட்கள்**

1. மீன் கழிவுகள் (தலை, எலும்பு, உள்ளுறுப்பு) – 1 பங்கு
2. வெல்லம் / நாட்டு சர்க்கரை – 1 பங்கு
3. பிளாஸ்டிக் அல்லது மண் தொட்டி
4. சுத்தமான துணி அல்லது மூடி

**தயாரிப்பு நடைமுறை**

1. மீன் கழிவுகளை சிறிய துண்டுகளாக நறுக்க வேண்டும்.

2. அதே அளவு வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. மீன் கழிவுகள் மற்றும் வெல்லத்தை தொட்டியில் அடுக்காக சேர்க்க வேண்டும்.

4. கலவையை நன்கு கலந்து, வாயு வெளியேறாத வகையில் நன்கு மூடி வைக்க வேண்டும்.

5. இதனை நிழலான இடத்தில் 21-30 நாட்கள் வைத்திருக்க வேண்டும்.

6. இடையே 3-4 நாட்களுக்கு ஒருமுறை கலவையை மூடி வைத்தபடியே நன்கு குலுக்கி வைத்திட வேண்டும்.

7. புளிப்பு முடிந்த பிறகு, நைலான் வலை (nylon mesh) மூலம் வடிகட்டி எடுக்க வேண்டும்.



**பயன்பாடு**

1 லிட்டர் தண்ணீரில் 5 மில்லி மீன் அமிலம் கலந்து தெளிக்க வேண்டும். பாசன நீருடன் கலந்து பயன் படுத்தலாம். (இந்த முறையில் பயன்படுத்தும் போது குறைந்தது 5 கிலோ மீன் மற்றும் 5 கிலோ வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட திரவம் பயன்படுத்த வேண்டும்.)

**மீன் அமிலத்தின் முக்கியத்துவம்**

மீன் அமினோ அமிலம் என்பது இயற்கை முறையில் தயாரிக்கப்படும் ஒரு திரவ உயிர் உரமாகும். இது தாவர வளர்ச்சிக்கு தேவையான அமினோ அமிலங்கள், நைட்ரஜன் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளை வழங்கி, பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் மேம்படுத்துகிறது. குறிப்பாக இயற்கை மற்றும் கரிம வேளாண்மையில் இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

தகவல் : ***IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.***

# குட்டி நாய்களில் புழு நாசினி மருந்தளிப்பின் முக்கியத்துவம்

குட்டி நாய்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் புழு நாசினி மருந்தளிப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். குட்டி நாய்கள் பிறந்த காலத்திலிருந்தே பலவிதமான குடல்புழுக்கள் தாக்கத் திற்கு உள்ளாகும் அபாயம் உள்ளது. இவை தாயின் கருப்பை வழியாகவும் அல்லது தாய்ப்பால் மூலம் குட்டிகளுக்கு பரவக் கூடும்.



மேலும் மண்ணில் உள்ள தொற்று, மாசுபட்ட உணவு மற்றும் நீர் ஆகியவற்றின் மூலம் புழுக்கள் உடலில் நுழைகின்றன.

குட்டி நாய்களில் பொதுவாக காணப்படும் புழுக்கள் உருளைபுழு, கொக்கிப்புழு, நாடாப்புழு மற்றும் விப்வோம் ஆகும். இந்த புழுக்கள் குட்டி நாய்களின் குடலில் வாழ்ந்து, அவை உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களை உறிஞ்சி வளர்கின்றன. இதனால் குட்டி நாய்கள் சரியான வளர்ச்சி அடையாமல் தடைபடுகின்றன.

புழுக்கள் தாக்கம் காரணமாக குட்டி நாய்களில் பல்வேறு அறிகுறிகள் காணப்படும். அவற்றில் உடல் எடை குறைவு, வயிற்றுப்பெருக்கு, வயிற்றுப்போக்கு, வாந்தி, முடி தரம் குறைவு மற்றும் சோர்வு ஆகியவை அடங்கும். குறிப்பாக கொக்கிப்புழு, போன்ற புழுக்கள் ரத்தத்தை உறிஞ்சுவதால் ரத்தச்சோகை ஏற்படும் அபாயம் உள்ளது. கடுமையான தொற்றுகளில் குட்டி நாய்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்.

இந்த பிரச்சினைகளைத் தடுப்பதற்காக குடற்புழு நீக்க மருந்தளித்தல் மிகவும் முக்கியமானதாகும். பொதுவாக குட்டி நாய்களுக்கு 2-3 வார வயதில் முதல் குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. அதன் பின்னர் 2 வாரங்களுக்கு ஒருமுறை 3 மாதங்கள் வரை தொடர வேண்டும். பின்னர் மாதந்தோறும் அல்லது மருத்துவரின் ஆலோசனையின்படி மருந்தளிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

குடற்புழு நீக்கம் குட்டி நாய்களின் உடல் வளர்ச்சியை மேம் படுத்துவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. இது அவர்களின் உணவிலிருந்து முழுமையான ஊட்டச்சத்துகளை உறிஞ்ச உதவுகிறது. மேலும் புழுக்கள் காரணமாக ஏற்படும் பல்வேறு நோய்களையும் தடுக்கும்.

இந்த புழுக்கள் சில சமயங்களில் மனிதர்களுக்கும் பரவக் கூடியவை. குறிப்பாக குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு திறன் குறைந்தவர்களுக்கு இது அபாயகரமாக இருக்கும். எனவே குட்டி நாய்களுக்கு சரியான குடற்புழு நீக்கம் செய்வது மனிதர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க உதவுகிறது.

குடற்புழு நீக்கத்தோடு சுத்தமான பராமரிப்பும் அவசியம். குட்டி நாய்களின் தங்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். அவற்றின் மலத்தை உடனடியாக அகற்ற வேண்டும்.

சுத்தமான குடிநீர் மற்றும் சத்தான உணவு வழங்கப்பட வேண்டும். மேலும் தடுப்பூசி அட்டவணையுடன் இணைந்து குடற்புழு நீக்கம் செய்யப்படுவது சிறந்தது.

முடிவாக, குட்டி நாய்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் குடற்புழு நீக்கம் மிகவும் அவசியமானதாகும். இது வளர்ச்சி, நோய் எதிர்ப்பு திறன் மற்றும் பொது ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. எனவே ஒவ்வொரு நாய் வளர்ப்பவரும் தங்களுடைய குட்டி நாய்களுக்கு முறையான கால அட்டவணைப்படி கால்நடை மருத்துவரின் ஆலோசனையோடு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.




குட்டி நாயின் மலத்தில் உருளை புழு

தகவல் : *முனைவர் மா.வெங்கடேசன் மற்றும் முனைவர் சு.சிவ ராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.*



# நெற்பயிரில் இலை வண்ண அட்டையின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்




கடலூர், மே 23

அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவரும், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட B-2 (RAWE) மாணவருமான நிதிஷ் குமார் க, நெற்பயிரில் இலை வண்ண அட்டையின் பயன்பாடு என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்க நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார்.

இந்நிகழ்ச்சி, வேளாண் விரிவாக்கத் துறை பேராசிரியரும் தலைவருமான முனைவர் G.தமிழ் செல்வி & வேளாண் விரிவாக்கத் துறை பேராசிரியர் முனைவர் J.மீனாம்பிகை வழிகாட்டுதலிலும் நடைபெற்றது.

செயல்விளக்கத்தின் போது, நெற்பயிரில் தழைச்சத்து தேவையை சரியான நேரத்தில் கண்டறிய உதவும் இலை வண்ண அட்டையின் (Leaf Colour Chart - LCC) பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இலைகளின் பசுமை நிறத்தை வைத்து நைட்ரஜன் சத்து தேவையை கணித்து, தேவையான அளவில் மட்டுமே யூரியா பயன்படுத்துவதன் மூலம் உரச் செலவைக் குறைத்து அதிக மகசூல் பெறலாம் என விளக்கப்பட்டது. இச்செயல்முறை விளக்கத்தில் கலந்து கொண்ட விவசாயிகள், இலை வண்ண அட்டையின் பயன்பாட்டை ஆர்வமுடன் கற்றறிந்தனர்.

தகவல் : ***நிதிஷ் குமார் க, IV ஆண்டு இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக் கழகம்.***


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர்,
ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள்
கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
POWERGRID
BHEL
Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சமச்சீர் உர பயன்பாடு - ஒரு பார்வை



கடந்த சில நாட்களாக வேளாண்மைத் துறையிலும் வேளாண் அறிவியல் மையங்களிலும் சரி தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 'சமச்சீர் உர பயன் பாடு' குறித்த. விழிப்புணர்வு நிகழ்ச்சகள் நடைபெற்று வருவதை நாம் செய்தித்தாள் வாயிலாக அறிந்து கொண்டோம். அது என்ன சமச்சீர் உர பயன்பாடு என்பது பலருக்கும் புரியாத நிலை தான். சமச்சீர் உணவு சமச்சீர் கல்வி மாதிரி என்று நீங்க கேட்பது எனக்கு தெரியும். அது போல தான் இந்த சமச்சீர் உர பயன்பாட்டை குறித்து இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.

**சமச்சீர் உர பயன்பாடு?**

பயிர்களின் தேவைக்கேற்ப சரியான அளவு மற்றும் சரியான காலத்தில் உரங்களை பயன்படுத்தும் முறையாகும். சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிர்களின் தேவை, மண்ணின் வளம் மற்றும் தட்ப வெப்ப நிலை போன்றவற்றை அறிந்து கரிம உரங்களை பயன்படுத்தி இராசயன உரங்களை குறைக்க வேண்டும்.

மேலும் பயிரின் வளர்ச்சிக்கேற்ப அடியுரம், மேலுரம், தூர்கட்டும் பருவம், வளர்ச்சி பருவம் போன்ற அந்தந்த பருவத்திற்கேற்ற உரங்களை முழுமையாக இடாமல் பிரித்து பிரித்து இடவேண்டும். அவ்வாறு செய்வதால் சாகுபடிக்கான செலவும் கணிசமாக குறையும், மகசூல் அதிகரிக்கும். இதற்கு தங்களுடைய நிலத்தின் மண் வளத்தை அறிந்து கொள்ள மண்பரிசோதனை செய்ய வேண்டும்.

**மண்வள அட்டை (SOIL HEALTH CARD)**

மண்வள அட்டை (SOIL HEALTH CARD) என்பது நிலத்தின் ஜாதகம் போன்றது. மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளான தழை, மணி , சாம்பல்சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துகளின் இருப்பை அறிந்து அதற்கேற்ப சிக்கனமாக தேவைக்கேற்ப உரமிட இந்த அட்டை உதவும்.

மண்பரிசோதனை செய்ய கட்டணமாக ரூ.30/- மட்டுமே வசூலிக்கப்படுகிறது. அருகேயுள்ள நடமாடும் மண் பரிசோதனை மையங்களில் பரிசோதனை செய்து மண்வள அட்டை பெறலாம்.

தொழு உரம் உயிர் உரங்கள் பசுந்தாள் பசுந்தழை உரங்கள் போன்றவற்றை இணைத்து ஒருங்கிணைந்த முறையில் கூடுதலான செலவின்றி பயிரின் தேவைக்கேற்ப உரமிடுவதால் மண்ணின் வளமும் பயிரின் வளமும் செழிப்பாக இருக்கும். இதன் மூலமாக கணிசமாக சாகுபடிக்கான செலவும் மண்வளமும் பாதுகாக்கப்படும்.

இரசாயன உரங்களின் கூடுதலான விலையேற்றத்தை தவிர்க்க சமச்சீர் உர மேலாண்மை உதவும். பாடுபட்டு உழைக்கும் விவசாயிகள் தங்களுடைய இஷ்டம் போல கண்ட கண்ட உரங்களை கணக்கில்லாமல் போட்டு தங்களுடைய நிலத்தை மலடாக்குவதுடன் காசையும் கரியாக்குகின்றனர். இதனால் உழவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்று பெருமிதத்துடன் கூறி வருகின்றனர்.

அது தவறு. சந்தையின் தேவைக்கேற்ப தங்களுடைய மண் வளத்திற்கேற்ப பயிரை சாகுபடி செய்ய வேண்டும். அதற்கு சமச்சீரான உர மேலாண்மை சிறந்தது.

வரும் பருவத்திலாவது இதை பின்பற்றிட வேண்டுகிறேன்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# விவசாயிகள் அடையாள எண் பணி வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு



புதுக்கோட்டை, மே 23

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் விவசாய அடையாள எண் பதிவேற்றம் செய்யும் பணியினை வேளாண் இணை இயக்குநர் கள ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் அனைத்து விவசாயி களும் அடையாள எண் பெறுவது கட்டாயம் என பின்வருமாறு வேளாண் இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்ட விவசாய பயனாளி தரவுகளை அரசின் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதுடன், பயிர் சாகுபடி விவரங்கள் மற்றும் அரசு வழங்கும் மானியங்கள், உதவித்தொகைகள் போன்ற அனைத்து தகவல்களையும் பதிவு செய்யும் வகையில், அனைத்து விவசாயிகளுக்கும் "விவசாயி அடையாள எண்" வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் விவசாயம் சார்ந்த மானியங்கள், காப்பீடு, பயிர் சேத நிவாரணம் மற்றும் உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகளை பெறுவதற்கும் இந்த அடையாள எண் அவசியமாகும்.

**பதிவு செய்தல் :** இது குறித்து தங்களது கிராம நிர்வாக அலுவலகம், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் இ-சேவை மையங்களில் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. விவசாயிகள் தங்களது ஆதார் அட்டை, சிட்டா, மற்றும் செல்போன் எண்ணுடன் சென்று பதிவு செய்து கொள்ள லாம். இந்த பதிவு முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப் படுகிறது. எனவே, கந்தர்வகோட்டை வட்டாரத்திலுள்ள உள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக பதிவு செய்து கொண்டு அரசின் அனைத்து நலத்திட்டங்களையும் முழுமையாக பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என வேளாண் இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# உழவர் மையத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் இ-தேசிய வேளாண் சந்தை விவசாயிகள் பயிற்சி

இராமநாதபுரம், மே 23

இராமநாதபுரம் வட்டாரம், உழவர் மையத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் இ-தேசிய வேளாண் சந்தை விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.







இக்கூட்டத்தில் வரவேற்புரையாற்றிய வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) உ.அம்பேத்குமார், அனைவரையும் வரவேற்று வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப் படும் திட்டங்களுக்கான மானிய விபரங்கள் பற்றி விவசாயி களுக்கு எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) கு.இராஜேந்திரன், வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மின்னனு தேசிய வேளாண் சந்தை திட்டம் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் அவர் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட் களை தேசிய அளவில் சந்தைபடுத்தி அதிக விலைக்கு விற்பனை செய்து வருவாயினை பெருக்கிடவும் தங்களுக்கு இலாபம் தரக்கூடிய இரகத்தினை தேர்வு செய்து மின்னனு தேசிய வேளாண் சந்தை திட்டத்தின் கீழ் விற்பனை செய்யுமாறு விவசாயிகளிடம் கூறினார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) பொ.இராஜா, வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். இ-தேசிய வேளாண் சந்தையை பயன்படுத்தி விவசாயிகள் அனைவரும் தங்களின் விளைபொருட்களை தேசிய வேளாண் சந்தை திட்டத் தின் கிழ் விற்பனை செய்யுமாறு விவசாயிகளிடம் கூறினார். மேலும் விவசாயிகள் அனைவரும் இரசாயன உரத்தினை குறைத்து உயிர் உரங்கள் மற்றும் பசுந்தாள் உரங்களை பயன்படுத்தி மண்வளத்தை பாதுகாக்குமாறு விவசாயிகளிடம் எடுத்துக் கூறினார்.

இராமநாதபுரம் விற்பனைக் குழு செயலாளர் மல்லிகா, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் இ-தேசிய வேளாண்

சந்தை பற்றியும் விவசாயிகளிடம் கூறினார். மேலும் அவர் விலை வீழ்ச்சி காலங்களில் விவசாயிகள் கிட்டங்கியில் விளை பொருட்களை வைத்து விலை அதிகமாகும் போது தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்து அதிக இலாபம் பெறலாம் என விவசாயிகளிடம் எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் வேளாண்மை துணை இயக்குநர் மா.கோபால கிருஷ்ணன், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் இ-தேசிய வேளாண் சந்தை பற்றியும் விவசாயிகளிடம் கூறினார். விவசாயிகள் அனைவரும் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதன் மூலம் அதிக இலாபம் பெறமுடியும் என விவசாயிகளிடம் கூறினார்.

இராமநாதபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கண்காணிப் பாளர் சரவணக்குமார், இ-தேசிய வேளாண் சந்தை திட்டத்தின் மூலம் விற்பனை செய்யும் விவசாயிகளின் தொகை அவர்களது வங்கி கணக்கில் 48 மணி நேரத்துக்குள் நேரடியாக வரவு வைக்கப்படும் எனவும் விவசாயிகளிடம் கூறினார். மேலும் அவர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை விவசாயிகள் அணுகி பயனடையலாம் எனவும் விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) சீதாலெட்சுமி, வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் மற்றும் உயிர் உரங் களின் பயன்பாடுகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத் தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.கோசலாதேவி நன்றியுரை கூறினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் இராஜேஸ்குமார் மற்றும் அபினாஸ்ரீ ஆகியோர் செய்திருந்தனர்.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில்

# தென்னை மரத்தை சுத்தம் செய்யும் முறை

தென்னை மரத்தின் பாளை, பன்னாடை, கூராஞ்சி போன்ற வற்றை எடுத்து விடுவதற்கு ' அசடு' பார்த்தல் சுத்தம் செய்தல், 'சிரை' எடுத்தல் என்று பல பெயரிட்டு இடத்து இடம் மாற்றுப் பெயருடன் கூறுகிறார்கள்.

காய்ந்த பன்னாடைகள் காற்றில் அசைந்து கொண்டு இருக்கும். சில காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது. மேல் மட்டையிலுள்ள பன்னாடைகள் மட்டை இடுக்குகளில் பலமாக ஒட்டிக் கொண்டிருக்கும் மட்டைகளை மரத்தோடு சேர்த்து வரித்து கட்டினார் போல் தென்படும் பன்னாடைகள் காற்றில் உள்ள தூசிகளையும், காற்றில் பறந்து வரும் வேறு மரத்து இலைச் சருகுகளையும், பாளையிலிருந்து கொட்டிய பூக்களையும், மட்டை இடுக்குகளில் தேக்கி வைத்துக் கொள்கிறது. இதனால் பல்வேறு வியாதிகள் வந்து மரத்தைக் தாக்கும் சூழ்நிலைகளை உருவாக்குகிறது. பாளைகள் பொய் பாளை வர ஏதுவாகும்.

தேங்காய் பறித்த கூராஞ்சி, காய்ந்த பாளை, பன்னாடை, காய்ந்து போன மட்டை இவைகள் அடைசலாக இருக்கும். இதனால் சூரிய வெளிச்சம் தடை ஏற்படும். வெறும் கூராஞ்சிகள் சீக்கிரம் காய்வது இல்லை. பச்சையாக உயிருடன் இருக்கும். வேர்கள் கிரகித்து அனுப்பும் உணவை கழிவுகளை எல்லாம் பங்கு போட்டுக் கொள்வதால், மேல் பாளைகளுக்கும், குச்சங் காய்களுக்கும் போதிய அளவில் சத்துக்கள் போய் சேராமல் குரும்பைகள் கொட்டி விடுகிறது.

சருகாய் காய்ந்து தொங்கும் பன்னாடைகளையும், வெறும் கூராஞ்சிகளையும் இணைத்து சிலந்திப் பூச்சிகள் வலைகள் அமைத்துக் கொள்வதால் மகரந்த சேர்க்கைக்கு உதவியாக விளங்கும் வண்ணாத்திப் பூச்சிகள் தேனீக்கள் தேன் பருக வரும்போது வலையில் சிக்கி, சிலந்தி வலையான் போன்ற பூச்சிகளால் கொல்லப்படுகிறது. அதனால் மகரந்த சேர்க்கை தடைப்பட்டு குரும்பைப் பிடிப்பு குறையும்.

மட்டை இடுக்குகளில் கழிவுகள் தங்கியிருந்தால் எலிகள், அணில்கள், கூடு கட்டி குட்டி போட்டு குடும்பம் நடத்த ஆரம்பித்து விடுகிறது.

தென்னையின் பூ, பிஞ்சுகள், இளநீர்களை இவைகள் சாப்பிடுகின்றன. சில எலிகள் கண்ணாடி மண்டையில் (மேல்பாகம்) ஓட்டை இட்டு உள்ளே ருசியான குருத்துப் போக நேரிடுகிறது. எலிகள் மட்டை பாளையை ஒட்டையிட்டு உள்ளே இருக்கும் பூ பிஞ்சுகளை சாப்பிடுகிறது. அதன்பிறகு அந்தப் பாளை காய்ந்து விடுகிறது. மர நாய், குரங்கு போன்றவைகள் நாடோடிகளாக அலைந்து திரிந்து இளநீர் குரும்பகைகளைத் தின்கிறது. மரம் சுத்தமாக இருந்தால் இவைகள் அருகில் வருவது குறையும்.

**சுத்தம் செய்வது எப்படி?**

அனுபவம் உள்ள மரமேறிகளை மரத்தில் ஏறச் செய்ய வேண்டும். கை வைத்த உடனேயே வரக்கூடிய மடிந்துபோன பாளை, பன்னாடைகளை எடுத்துவிட வேண்டும். மேல் மட்டை இடுக்குகளில் நீட்டிக் கொண்டிருக்கும் பன்னாடைகளை கூறிய அரிவாளால் அறுத்து எடுக்க வேண்டும். மரம் வெளியே தெரியும் அளவுக்கு பன்னாடைகளை அறுத்தெடுக்கக் கூடாது. மட்டை இடுக்குக்குள் ஒரு குச்சியை விட்டு உள்ளே இருக்கும் கழிவுகளான தூசி, பாளையிலிருந்து கொட்டிய பூ ஆகியவை கம்போஸ்டாக மாறி இருப்பவற்றை கீழே தள்ள வேண்டும். சிற குச்சியைப் பயன்படுத்தியும் கழிவுகளை குத்தி தள்ளலாம். மரத்தில் எக்காரணத்தைக் கொண்டும் காயம் ஏற்படக்கூடாது கவனமாக செய்ய வேண்டும்.

**கவனம்**

சிலர் கையை விட்டுத் தள்ளுவதையும் பார்க்கலாம். அப்படிச் செய்பவர்கள் கவனமாக செய்ய வேண்டும். மட்டை இடுக்கு களில் பல்லி, பாம்பு, பூரான், தேள், நெருப்பெறும்பு இப்படிப்பட்ட விச ஐந்துக்கள் குடி இருக்கும். அதனால் அசடு எடுக்கும்போது கவனம் தேவை. அனுபவம் உள்ள மரம் ஏறிகள் உடனே தெரிந்து கொள்வார்கள். மட்டைகளில் குளவிகள், தேனீக்கள் கூடு கட்டித் தொங்கும் பொந்துகள் (வளை) உள்ள மரங்களில் கதண்டுகளும், குளவிகளும் குடியிருந்து தீங்கு விளை விக்கலாம். அதனால் மரம் ஏறுபவர்களும் கவனம் தேவை. கதண்டு என்ற குளவிகள் மிகவும் கொடூரமானது துரத்திக் துரத்தி கடிக்கும். அதனால் அத்தகைய விச ஐந்துக்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கதண்டுகள் விசம் உள்ள வண்டுகள் ஆகும்.

## கதண்டுகளை ஒழிக்க எளிய வழி

கதண்டுகளை இரவு நேரத்தில் தீப்பந்தங்களைக் கொண்டு பொசுக்குவார்கள். சிறிய வளையாக இருந்தால் சாணியை உருண்டைகளாக உருட்டி ரெடியாக வைத்திருந்து, கண்மூடி கண் இமைக்கும் முன் அடைத்துப் பூசிவிட வேண்டும். துவராம் அடைபட்டு விட்ட பிறகு அவைகளால் வெளியே வர மூடிவ தில்லை, உள்ளே துவாரம் பெரிதாக இருக்குமானால் சாணி வைத்து அது உள்ளேச் சென்று விடாமல் இருக்க பாலித்தீன் சாக்கு ஒன்றை எடுத்து விரிப்பாக தயார் செய்து மரத்தின் வளையைச் சுற்றிலும் பொதிந்து மேலும் கீழும் கட்டி விடலாம்.

கதண்டுகள் உள்ளே இருந்து செத்துவிடும். கதண்டு களால் மரத்திற்கு பாதிப்பு ஏற்படுவது இல்லை. வளரவிட்டால் தோப்பிற்குள் செல்கிறவர்களை துரத்தித் தாக்கும்.

## கங்கோலை கிழித்தல்

மட்டைகள் நெருக்கமாக உள்ள மரங்களில் உள்ள மட்டை களின் அடிப்பகுதிகளில் உள்ள சாள்(அரைஅடி) அளவு ஓலைகளை கிழித்து எடுக்க வேண்டும். அதை ’காங்கோலை கிழித்தல்‘ என்று கூறுவார்கள்.

இதனால் சூரிய வெளிச்சம் பாளை, பூ காய்களுக்கும் மரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கிறது. கங்கோலையில் உள்ள ஈர்க்கின் குச்சிகளை சேர்த்துக் கட்டி விளக்கு மாறாகப் பயன்படுத்தலாம். ஒரிரு குரும்பைகள் (பிஞ்சு) இருக்கும் குலைகளில் அந்த குரும்பல்களை வைத்துவிட்டு இதர கூராஞ்சிகளை கொய்து விடலாம். இருக்கிற ஒரிரு குரும்பல் களும் பருமன் தேய்காய்களாகக் கிடைக்கும்.

*தகவல் : யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை .*



# எண்ணெய்வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி




சிவகங்கை, மே 23

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா – மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மந்திக் கண்மாய் கிராமத்தில் எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தைப்பத்துல் ஆசிபா தலைமை தாங்கி விதை முதல் விதை வரை விவசாயிகள் கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கமும் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இந்த பயிற்சியில் ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரத்தினை கடைசி உழவிற்கு முன்பு இட வேண்டும் என்றும், விதை நேர்த்தி செய்ய ரைசோபியம் 400 மி.லி,பாஸ்போபாக்டீரியா 400 மி.லி எண்ணெய்வித்து பயிர்களில் கலந்து விதைக்கவும், வயலில் இடுவதற்கு ரைசோபியம் 800 மி.லி, பாஸ்போபாக்டீரியா 800 மி.லி வயலில் இட வேண்டும். பருவம் மற்றும் உயர் விளைச்சல் இரகங்களான நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி போன்ற பயிர்களுக்கு (நிலக்கடலை TMV 13, VRI 8,9,10, CO8, தரணி, கதிரிலபாக்சி) இரகங்களை பற்றி குறித்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி பேராசிரியர் அனிதா ஸ்ரீ, ஒருங்கிணைந்த களை மேலாண்மை, உர மலாண்மை தொழில்நுட்பங்களான (ஜிப்சம் ஒரு எக்டேருக்கு 400 கிலோவீதம் 40–45 நாளில் பாசனப் பயிருக்கும் 40–70வது நாளில் மானாவாரி பயிருக்கும் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும் என்றும், வளர்ச்சி ஊக்கிகள் ஏக்கருக்கு 4 கிலோ TNAU– நிலக்கடலை ரிச் பூக்கும் பருவம் (2 கிலோ / ஏக்கர்)

மற்றும் காய்பிடிக்கும் பருவம் (2 கிலோ / ஏக்கர்) தெளிக்க வேண்டும். 5 கிலோ எண்ணெய் வித்து நுண்ணூட்டம் உரம் (அ) 10 கிலோ ஜிங்க் சல்பேட் + 20 கிலோ மணல் கலந்து இட வேண்டும் என்றும் எடுத்து கூறினார். காளையார்கோவில் வட்டார துணை வேளாண்மை அலுவலர் செந்தில், எண்ணெய் வித்து பயிர்களில் நோய் மற்றும் பூச்சி கண்டறியும் முறைகள் மற்றும் மேலாண்மை முறைகள் பற்றியும் நிலக்கடலை சுருள் பூச்சி கட்டுப்படுத்த கம்பு மற்றும் திணை பயிர்களை ஊடுபயிராக பயிரிடுதல் விதைப்பு பட்டம் தொடங்கும் முன்பே விதைக்க வேண்டும் என்றும், வேர்ப் புழுவை கட்டுப்படுத்த கோடை உழவு செய்யவும், புகையிலை வெட்டுப்புழு கட்டுப்படுத்த விளக்கு பொறி 1 மற்றும் இனக்கவர்ச்சி பொறி 5 எண்கள் பொருத்துதல் வேண்டும்.

எண்ணெய் வித்து பயிர்களில் ஊடுபயிராக ஆமணக்கு, துவரை போன்ற பயிர்களை பயிரிட வேண்டும் என்று எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் முத்து காயத்ரி, விவசாய அடையாள அட்டை பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் மற்றும் வேளாண்மைத் துறை மற்றும் இதர துறைகளில் உள்ள திட்டங்களை பற்றி எடுத்து கூறினார். காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, அட்மா திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்தமான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான பட்டறிவு, கண்டுணர்வு பயிற்சிகள் செயல்விளக்கத்திடல்கள் அமைத்தல் தொடர்பாக திட்டங் களை பற்றி விவசாயிகளுக்கு விரி வான முறையில் எடுத்துக் கூறினார். உழவர் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். இயற்கை முறையில் விவசாயம் செய்வது மண்வளத்தை பாதுகாத்தல், இயற்கை உர கரைசலான ஜீவாமிர்தம், கன ஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன் பாடுகள் பற்றி எடுத்துக் கூறினார். காளையார்கோவில் வட்டார உதவி தொழில் நுட்ப மேலாளர் காளிஸ்வரி பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தார்.

## சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காய்கறி நாற்றுகள் விற்பனைக்கு வழங்கப்படும்

திருச்சி, மே 23

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, விவசாயிகள் பயன் பெறும் வகையில் காய்கறி நாற்றுகள் குறிப்பாக

தக்காளி, கத்தரி, மிளகாய் போன்ற காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் காய்கறி நாற்றுக்களை பெறுவதற்கு முன் பதிவு செய்ய வேண்டும். முன்பதிவு செய்பவர்களுக்கு காய்கறி நாற்றுகள் குழித்தட்டில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வழங்கப்படும். ஆதலால் நாற்றுகள் தேவைப்படும் விவசாய பெருங்குடி மக்கள் 98432 18818 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.




# தமிழ்நாட்டில் பயிர் உற்பத்தியில் உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகளின் பங்கு மற்றும் தாக்கம் – ஒரு பார்வை

தமிழ்நாடு ஒரு விவசாய மையமாக விளங்குகிறது. இங்கு நெல், பருப்பு, எண்ணெய் விதைகள், தோட்டக்கலை பயிர்கள் போன்ற பல்வேறு பயிர்கள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆனால் கடந்த சில தசாப்தங்களில் வேதியியல் உரங்களின் அதிகப்படியான பயன்பாடு காரணமாக மண் வளம் குறைந்து, சுற்றுச்சூழல் பாதிப்பு, நிலத்தடி நீர் மாசடைதல், மண் உயிரினங்களின் அழிவு போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையை மாற்றும் மாற்று வழியாக உயிர்சார் உரங்கள் (Biofertilizers) மற்றும் உயிர்க்கள ஊக்கிகள் (Bioinoculants) இன்று வேளாண்மையின் முக்கிய கூறுகளாகி வருகின்றன. இவை வேதியியல் உரங்களுக்கு மாற்றாக, இயற்கை நுண்ணுயிர்களின் செயல்பாட்டை பயன்படுத்தி மண்ணின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தும் சுற்றுச்சூழல் நட்பு தொழில்நுட்பமாகும்.

**உயிர்சார் உரங்களின் வரையறை மற்றும் செயல்முறை**

உயிர்சார் உரங்கள் என்பது உயிர் நுண்ணுயிரிகளைக் கொண்ட உரங்கள் ஆகும். இவை மண்ணில் அல்லது விதை/வேர் பகுதியில் சேர்க்கப்பட்டு, தாவர வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை மண்ணிலிருந்து தாவரத்திற்கு சீராகக் கிடைக்கச் செய்கின்றன.

**செயல்முறை**

● நுண்ணுயிரிகள் நைட்ரஜனை வானிலிருந்து நிலைநிறுத்துகின்றன.

● பாஸ்பேட்டை கரைத்து தாவரத்திற்கு கிடைக்கச் செய்கின்றன.

● கரிமச் சேர்மங்களை உற்பத்தி செய்து மண் வளத்தை மேம்படுத்துகின்றன.

● தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஹார்மோன்கள் உற்பத்தி செய்கின்றன.

● இவை மண் இயற்கை சமநிலையை காக்கும் மற்றும் மண் உயிரினங்களின் செயல்பாட்டை தூண்டும்.

**உயிர்க்கள ஊக்கிகள் (Bioinoculants) - வகைகள் மற்றும் பங்கு**

உயிர்க்கள ஊக்கிகள் என்பது தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் நுண்ணுயிரிகள். இவை விதைகள், மண் அல்லது வேர் பகுதிகளில் சேர்க்கப்படுகின்றன.

**PGPR (Plant Growth Promoting Rhizobacteria)**

தாவர வளர்ச்சி ஹார்மோன்கள் (IAA, GA, Cytokinin) உற்பத்தி செய்கின்றன.

● வேர் நீளத்தையும் கிளைகளையும் அதிகரிக்கின்றன.

**Trichoderma spp.**

● பூஞ்சை நோய்களை கட்டுப்படுத்தும் உயிர் எதிரி.

● மண் நோய்களின் தாக்கத்தை 60–70% வரை குறைக்கும்.

**Pseudomonas fluorescens**

● வேர் பகுதியில் நோய் தடுப்பு திறன் கொண்டது.

● நெல், காய்கறி, தோட்டப் பயிர்களில் பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது.

Bacillus subtilis

● தாவர வளர்ச்சி ஊக்கி மற்றும் நோய் கட்டுப்பாட்டாளர்.

**Phosphate Solubilizing Microbes (PSM)**

● மண்ணில் உள்ள பாஸ்பேட்டை கரைத்து தாவரத்திற்கு பயன்படச் செய்கின்றன.

**தமிழ்நாட்டில் உயிர்சார் உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டின் தற்போதைய நிலை**

● தமிழ்நாடு அரசு 2000ம் ஆண்டிலிருந்து உயிர்சார் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

● தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU), கோயம் புத்தூர் – உயிர்சார் உர உற்பத்திக்கான தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது.

● தமிழ்நாடு உயிர்சார் வேளாண்மை நிறுவனம் (TNOF) - உயிர்சார் விவசாயப் பயிற்சிகளை வழங்குகிறது.

● மாவட்ட வேளாண் அலுவலகங்கள் – விவசாயிகளுக்கு உயிர்சார் உரம் விநியோகம் செய்கின்றன.

**உற்பத்தி மையங்கள்**

திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, ஈரோடு, திருநெல்வேலி, சேலம், புதுக்கோட்டை.

**பயன்பாடு அதிகம் உள்ள பயிர்கள்**

நெல், சோளம், பருப்பு, நிலக்கடலை, மக்காச்சோளம், தோட்டப் பயிர்கள் (தக்காளி, மிளகாய், பூக்கோசு).

**உயிர்சார் உரங்களின் பயிர் உற்பத்தி மீதான தாக்கம்**

**மண் வளம் மீது தாக்கம்**

- உயிர்சார் உரங்கள் மண் உயிரினங்களின் எண்ணிக்கையை 30-40% அதிகரிக்கின்றன.
- கரிம கார்பன் அளவு 0.2% வரை உயர்கிறது.
- மண் pH சமநிலை திருத்தம் ஏற்படுகிறது.

**தாவர வளர்ச்சி மற்றும் விளைச்சல்**

- நெல்-15% வரை விளைச்சல் அதிகரிப்பு (TNAU ஆய்வு, 2022).
- பருப்பு வகைகள் - வேர் மூடிச்சுகள் 25-30% அதிகரிப்பு.
- தோட்டப் பயிர்கள் - பழத் தரம் மற்றும் நீடிப்பு அதிகரிப்பு.

**பொருளாதார நன்மைகள்**

- வேதியியல் உர செலவு 25-35% குறைகிறது.
- விளைச்சல் மதிப்பு உயரும்.
- விவசாயிகளின் நிகர வருமானம் அதிகரிக்கும்.

**உயிர்சார் உரங்கள் பயன்பாட்டில் எதிர்நோக்கும் சவால்கள்**

1. விவசாயிகளிடையே விழிப்புணர்வு குறைவு - பலர் இன்னும் வேதியியல் உரங்களையே நம்புகின்றனர்.
2. நுண்ணுயிர்களின் உயிர்ச்சக்தி குறைவு - சேமிப்பு காலம் குறைவாக இருப்பது.
3. தரமற்ற பொருட்கள் சந்தையில் இருப்பது - சான்றிதழ் இல்லாத தயாரிப்புகள் பரவல்.
4. பயிற்சி மற்றும் வழிகாட்டல் பற்றாக்குறை.

**தீர்வுகள் மற்றும் அரசு நடவடிக்கைகள்**

1. Biofertilizer Quality Control Act அமல்படுத்தல்.
2. உயிர்சார் வேளாண்மை பயிற்சி மையங்கள் - ஒவ்வொரு மாவட்டத்திலும்.

3. உயிர்சார் கிராமம் – (Biovillage) திட்டம் – உயிர்சார் முறையில் முழு கிராமங்கள் மாற்றம்.

4. இணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM) – உயிர்சார் உரங்கள் + வேதியியல் உரங்கள் இணைந்து பயன்படுத்தும் முறை.

5. மண்வளம் பரிசோதனை அட்டைகள் (Soil Health Card) மூலம் சரியான உரம் தேர்வு.

**எதிர்கால வாய்ப்புகள்**

1. நானோ தொழில்நுட்பத்துடன் உயிர்சார் உரங்கள் இணைப்பு

2. நுண்ணுயிரிகளை நானோகேரியர்களில் வைத்துச் சீராக மண்ணில் சேர்க்கும் புதிய முறை.

3. ஜீனியல் பொறியியல் நுண்ணுயிரிகள்

4. மண் நோய் எதிர்ப்பு மற்றும் ஊட்டச்சத்து உற்பத்தி திறன் அதிகமான புதிய உயிரிகள் உருவாக்கம்.

5. உயிர்சார் உர வணிகமயமாக்கல்

6. இளம் தொழில்முனைவோருக்கு (Agri Startups) வாய்ப்பு.


7. Organic Tamil Nadu Mission 2030 - மாநிலத்தின் 30% நிலப் பகுதி உயிர்சார் முறையில் மாற்றப்படும் திட்டம்.

**தமிழ்நாட்டில் உயிர்சார் உரங்களும் உயிர்க்கள ஊக்கிகளும் வேளாண்மை**

துறையில் புதிய உயிர் ஊட்டத்தை வழங்குகின்றன. இவை மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து, சுற்றுச்சூழலுக்கு சேதமில்லாமல், விவசாயிகளுக்கு நிலையான வருமானத்தை உறுதிப்படுத்து கின்றன. மண்ணின் இயற்கை சமநிலையை மீட்டெடுக்கும் ஒரே வழி உயிர்சார் வேளாண்மை என்பதை இன்றைய நிலை உணர்த் துகிறது. எனவே, எதிர்காலத்தில் - உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகள் – நிலைத்த தமிழ்நாட்டின் பசுமை வளர்ச்சிக்கு அடிப்படைத் தூண் – என்ற நிலை உருவாகும்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்) அபிநயா. ரா மற்றும் பாமா. ம(இளங்கலை வேளாண் மாணவி) நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333